(ஆ) இந்தப் பொருட்கள் வாங்குவதற்கு அரசின் முன் அனுமதி பெறப்பெற்றுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(அ) காட்டுமன்னார்கோயில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து வாங்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூபாய்கள்.

ஆண்டு		மின் விளக்குகள் மதிப்பு ரூ.	குடிதண்ணீர் குழாய்கள். மதிப்பு ரூ.	சத்துணவுப் பொருள்கள்
1984–85	..	8,86,585	11,718	இல்லை.
1985–86	..	3,84,673	3,91,997	இல்லை.

(ஆ) இல்லை.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற பொது நிதியை இப்படி அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெறாமலேயே அதிகாரிகள் அபிப்ராயப்படி எடுத்து செலவு செய்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ? காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியம் மட்டுமல்லாமல் மேற்கொண்டு இம்மாதிரி தமிழகத்திலுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களிலும் இம்மாதிரி லட்சக்கணக்கில் வேண்டுமென்று பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்து செலவு செய்திருக்கிறார்களே, இனிமேல் அரசாங்கத்தினுடைய அனுமதியை பெற்றுத்தான் செலவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் உத்தரவு இடுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியத் தேர்தல் வழக்குகள்.

151—(*வினா எண். 9731)—திரு. வி. கே. இராசு : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடந்து முடிந்த ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியத் தேர்தல்களில் அரசு மீது வழக்கு ஏதேனும் போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எதிர் வழக்காடியுள்ளதா ? ..

1986 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு இல்லாமல், ஊராட்சித் தேர்தல்களை நடத்தியதற்கு எதிராக அரசு மீது, டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவும், ஒரு உரிமையியல் மேல் முறையீடும் போடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

ஆண்டிப்பட்டி அரசினர் மருந்தகம்.

152—(*வினா எண். 2000) திரு. இரா. முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்தும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை 24 படுக்கைகள் கொண்ட பொதுப்பிரிவு, 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவுடன், அறுவை அரங்கு, எக்ஸ்ரே பிரிவு மற்றும் மருத்துவர்கள் குடியிருப்பு இல்லங்கள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசாணை (நிலை) எண். 1110, சுகாதாரம், நாள் 9–6–1986-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

கோவை மருத்துவமனையில் தீப்புண் தீவிர சிகிச்சைப் பிரிவு.

153—(*வினா எண். 6654) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?